'மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

PROVINCIAL DEPARTMENT OF EDUCATION –NORTHERN PROVINCE

முதலாம் தவணைப் பரீட்சை - 2024

நாடகமும் அரங்கியலும் - 58

தரம் - 12 புள்ளித்திட்டம்

# பகுதி - 1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 2 | 21 | 5 | 31 | 5 |
| 02 | 2 | 12 | 4 | 22 | 4 | 32 | 2 |
| 03 | 3 | 13 | 5 | 23 | 2 | 33 | 1 |
| 04 | 4 | 14 | 2 | 24 | 2 | 34 | 4 |
| 05 | 5 | 15 | 3 | 25 | 1 | 35 | 4 |
| 06 | 3 | 16 | 3 | 26 | 2 | 36 | 5 |
| 07 | 3 | 17 | 1 | 27 | 5 | 37 | 3 |
| 08 | 5 | 18 | 3 | 28 | 5 | 38 | 1 |
| 09 | 1 | 19 | 1 | 29 | 4 | 39 | 2 |
| 10 | 1 | 20 | 2 | 30 | 2 | 40 | 1 |



kalvi.lk

# பகுதி – 2

**1)**

1)பார்ப்போரை அடிப்படையாக கொண்டு அவர்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்யப்படும் கலைகள் இதில் ஆற்றுவோர் பார்ப்போர் அரங்கவெளி ஆகிய மூன்றும் முக்கியம் பெறுகின்றது.

11) அ)கட்புல – செவிப்புல கலைவடிவம்

ஆ)உயிரோட்டமான கலைவடிவம்

இ)கணப்பிரசன்னமாகும் கலைவடிவம்

ஈ)தாக்க மறுதாக்க கலைவடிவம்

உ)பார்ப்போரிடம் நேரடித்தொடர்பு கொள்ளல்

111)நாடகத்தை ஏனைய ஆற்றுகைக் கலைகளான இசை நடனம் சினிமா வில்லுப்பாட்டு என்பவற்றுடன் வேறுபடுத்தி எழுதியிருப்பின் புள்ளிகள் வழங்கலாம்.

**2)**

1)கலை என்பது ஓர் உணர்வினை அன்றேல் பெறுமானத்தினை வெளிப்படுத்துவதிலும் தொடர்புபடுத்துவதிலும் மனிதத்திறன் தொழிற்படும் முறைமை ஆகும்.

11)அரிஸ்ரோட்டில் குரோசே ஹெகல் பியேட்ஸ்லி எறிக்நியூட்டன் டால்ஸ்டாய்

முனைப்புப் பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடு –வில்லியம் வேட்ஸ்வேத்

மனித உணர்வுகளின் வெளிப்பாடு – R . G கொலிவூட்

(மேலே குறிப்பிட்டவர்களில் யாராவது இருவரின் கூற்றுக்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்கலாம்)

111) அ)வரைகலைகள் - சித்திரம் , ஓவியம்

ஆ)குழைமைக்கலைகள் -சிற்பம் ,மட்பாண்டம்

இ)வாய்ச்சொற்கலைகள் -பாடல்

ஈ)ஆற்றுகைக்கலைகள் -நடனம் ,நாடகம் , சினிமா

மேல் குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு கலையைப் பிரித்து அதற்குரிய விளக்கம் எழுதியிருப்பின் புள்ளி வழங்கலாம்.

**3)**

1)மனிதர்கள் நம்பிக்கையின் அடிப்படையில் புனிதத் தன்மையில் ஐதிகம் சார்ந்த மீள மீள மக்களால் செய்யப்படுகின்ற செயல்கள்.

(சடங்கு தொடர்பாக அறிஞர்கள் கூறிய கூற்றுக்களை கூறி விளக்கியிருப்பின் புள்ளி வழங்கலாம்)



kalvi.lk

11)சூரன்போர் பாண்டவர் வனவாசம் பாஸ்கா வேடுவச்சடங்கு காடேறித்திருவிழா

(மேலே குறிப்பிட்ட சடங்கு ஒன்றினை குறிப்பிட்டு பின்வரும் ஆற்றுகை முறையினை எழுதியிருப்பின் புள்ளி வழங்குக )

அ)சடங்கிற்குரிய களத்தினை தயார் செய்தல்

ஆ)அலங்கரித்தல்

இ)தெய்வமேறி ஆடுதல் (ஆள்மேற்கொள்ளல்)

ஈ)பாடல் ஆடல் இசைக்கருவிகள்

(மேலும் பொருத்தமான சடங்கினை குறிப்பிட்டு ஆற்றப்படும் முறையினை குறிப்பிட்டு இருப்பின் புள்ளி வழங்குங்கள்)

111)சடங்கிற்கும் அரங்கிற்கும் இடையிலான ஒற்றுமைப்பண்புகள்

1.பாத்திரங்கள்

2.சொல்லாடற்பண்பு

3.கதை

4.ஆற்றுகைவெளி

5.துணைக்கலைகள்

6.கூடிக்கருமமாற்றல்

Education கல்வி අධ්‍යාපන

**4)**

1) ஈஸ்கிலஸ் (கிமு 525-456)

- கிரேக்கத்தின் மூத்த நாடகாசிரியர்
- 90நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.
- ஐரோப்பிய நாடகத்தின் தந்தை எனவும் அழைக்கப்பட்டார்.
- முக்கூட்டுத் தொகுதி நாடகங்களை எழுதியுள்ளார்.
- கோரஸின் எண்ணிக்கையை 12 குறைத்தார்.
- சமகால விடயங்களை மையப்படுத்தி த பேசியன்ஸ் நாடகத்தை எழுதினார்.
- கொலை பழிவாங்கல் அதற்காக துக்கம் துக்கத்தில் சோகம் இவரது நாடகங்களில் விரவிக் காணப்பட்டது.

2) சோபோகிளிஸ் (கிமு 496 – 406)

- நூறு நாடகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.
- இவரது நாடகங்களில் சிக்கலான கதைச்சூழ்வுகள் காணப்பட்டன.
- காட்சி மாற்றத்தினை காட்ட பெரியக்ரோய் எனும் உபகரணத்தைப் பயன்படுத்தினார்.
- கோரஸ்சின் தலையீட்டைக் குறைத்து காட்சிகளுக்கிடையே விமர்சளம் செய்து பார்ப்போர் மத்தியில் உணர்வு மாற்றங்களை ஏற்படுத்தம் அம்சங்களைக் கையாண்டார்.



kalvi.lk

- TREAGEDY நாடகத்திற்குரிய கட்டிறுக்கத்தையும் கட்டமைப்பையும் கொண்ட நாடகங்களைப் படைத்தார்.
- தெய்வங்களுக்கும் மனிதருக்கும் இடையிலான முரண்நிலைகளை விதி சாபத்தின் தளத்தில் நின்று படைத்தார்.

3) யூறிப்பிடிஸ் (கிமு 484 – 406)

- 92 நாடகங்களை எழுதியுள்ளார்.
- இவரது நாடகங்கள் தனிமனித உளவியல் மீது அக்கறை கொண்டிருந்தது.
- பெண் பாத்திரங்களை முதன்மைப்படுத்தினார்.
- கட்டிறுக்கத்தை கைவிடல்
- கோரஸ் முக்கியத்துவத்தை முற்றாக குறைத்தமை.

**5)**

1)சோபோகிளிஸ்

11)ஈடிப்பஸ் , ஜொகஸ்டா , கிறியோன் , தைய்ரீசியஸ் , செய்தியாளன் , இடையன்

111)தனிமனிதனுக்கும் இறைநியதிக்கும் இடையிலான போராட்டம் தொடர்பாக ஈடிப்பஸ்- கிறியோன் , ஈடிப்பஸ் -தைரீசியஸ் , ஈடிப்பஸ் - கோரஸ் , ஈடிப்பஸ் - ஜொகஸ்ரா போன்றோர் முரண்படும் சந்தர்ப்பங்களை விளக்கியிருப்பின் புள்ளி வழங்குக.

**6)**

1) பலே

- இசைக்கேற்ப உடலைப் பயன்படுத்தி ஆடுதல்.
- பல்வேறு நடனக்கோலங்கள் காணப்படும்.
- 16 ம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோற்றம் பெற்றது.
- 19 ம் நூற்றாண்டில் உலகெங்கும் வியாபித்த தொல்சீர் நடனங்களில் ஒன்றாக விளங்கியது.
- பலே நடனங்களில் வேடஉடை , ஒப்பனை செல்வாக்கு செலுத்தும்.
- ஒளியூட்டுகை பிரதானமாக இடம்பெறும்.
- பிரசித்தி பெற்ற பலே-swan lake ,nut cracker ,sleeping beauty

2)ஒப்பேறா

- 16 ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய இசை நாடக வடிவம்.
- இசையும் வாத்தியக் கருவியும் பிரதானம்.
- காவியத்தன்மையான மொழி பயன்படுத்தப்பட்டது.
- குறியீட்டுப்பாங்கான கைப்பொருள் பயன்படுத்தினர்.
- பாடலும் இசையும் பிரதானமானது.
- நடிகன் எந்த வேளையிலும் பாடவும் நடிக்கவும் தயாராக இருப்பார்.

3)வேலன் வெறியாட்டு

- பெண்களின் அகவயப்பட்ட நோய்களை நீக்க இச் சடங்கு மேற்கொள்ளப்படுகிறது.



kalvi.lk

- இதில் நோய்வாய்ப்பட்ட பெண் , தாய் , வேலன் , உறவினர் போன்ற பாத்திரங்கள் காணப்படும்.
- வேலன் வெறியாட்டுடன் தொடர்புடைய தெய்வமாக முருகன் காணப்படுகின்றான்.
- இச் சடங்கில் போலச் செய்தல் , ஆடல் ,உரையாடல் ,பாத்திரமேற்கொள்ளல் ,ஊமம் ,அரங்கவெளி ,வாத்திய இசை போன்ற அரங்கப் பண்புகள் காணப்படும்.

4)ஊமச் சித்திரிப்பு

- ஊமம் என்பது நடிகன் தமது வெளிப்பாட்டை வார்த்தைகள் இன்றி செயலிலே செய்வதாகும்.
- உடல் வழி சித்திரிப்பு பிரதானமானது.
- காண்பிய வழிச் சித்திரிப்பு , உணர்ச்சிவழிச் சித்திரிப்பு என்பன துணையாகப் பயன்படுத்தப்படும்.
- ஊம சித்திரிப்பின் மூலம் ஒரு செயலை ஒரு காட்சியை ஒரு நாடகத்தை செய்து காட்டலாம்.
- ஊமச் சித்திரிப்பில் ஈடுபடும் ஒருவர் பாத்திரம் பற்றி பகுப்பாய்வு , வெளிப்படுத்தப்படவுள்ள சம்பவம் பற்றிய தெளிவு அதனை செய்கை மூலம் எவ்வாறு வெளிப்படுத்தல் என்ற தெளிவு இருத்தல் வேண்டும்.

5)நாடகஎழுத்துரு

- நாடகஆற்றுகையின் கதை செயல்நிலைகள் துணைக்கலைகளின் பிரயோகம் போன்றவற்றை எழுத்தாக்க முறையில் கொண்டு வருதல் ஆகும்
- நாடகம் எனும் செயல் வடிவத்தின் ஆரம்ப நிலை வரிவடிவத்தில் எழுதப்பட்ட எழுத்துரு ஆகும்.
- இவ்வெழுத்துரு யதார்த்தப்பண்புடைய எழுத்துரு , யதார்த்தமற்ற நாடக எழுத்துரு என வகைப்படுத்தலாம்.
- இவ் எழுத்துருக்கள் வாசிப்பு நிலை எழுத்துருக்கள் , ஆற்றுகை நிலை எழுத்துருக்கள் எனவும் காணப்படுகின்றன.
- நாடக எழுத்துரு ஒன்றில் பாத்திரம் , கருப்பொருள் , மோதுகை , கதைப்பின்னல் ,மோடி , சொல்லாடல் , மேடைக்குறிப்புக்கள் போன்ற விடயங்களை காண முடியும்.



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page